உ

குகமயம்

# சுப்பிரமணியப்பிரபாவம்

(மந்திர முருகாற்றும் எதிர்முருகாற்றும்)



சிவ ஸ்ரீ இ. ஞானசேகரக்குருக்கள்.

(ப

சிவ

கந்

பிலே ரு

உ

குகமயம்

# சுப்பிரமணியப் பிரபாவம்

(மந்திர முருகாற்றும் எதிர் முருகாற்றும்)

இஃது

யாழ்ப்பாணம்

## சிவ ஸ்ரீ இ. ஞானசேகரக் குருக்கள்

அவர்களால்

கந்தபுராணம் முதலிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு

இயற்றி

யாழ்ப்பாணம்

ஸ்ரீ காந்தா அச்சகத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விளம்பி வருஷம் ஆவணி மாதம்

1958

விலை ரூபா. 1 ] [ பதிப்புரிமை.

உ

சிவமயம்

# விளம்பரம்

# அட்டபந்தன மருந்து

ஆகம ரீதியாகச் சுத்தமான சரக்குகளைக் கொண்டு இடித்தெடுக்கப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்ட பந்தன மருந்து. இது செம்மையாகச் செய்யப்படுவதால் நெடுங்காலம் பாவிக்கக் கூடியதாகும். வேண்டுவோர் ஒரு வாரத்துக்கு முன் முற்பணம் அனுப்பினால் உடனே முடித்துக் கொடுக்கப்படும். சாதிலிங்கம் முதலிய சரக்குகள் தற்போது விலை அதிகமாக இருத்தலால் ஒரு இருத்தல் மருந்து 7 ரூபாவிற்கு விற்க முடியாது. எனவே ஒரு ரூபா கூட்டி 8 ரூபாவாக விற்க நினைத்திருக்கிறேன். பிற ஊர்களுக்கு அனுப்புகில் பார்சல் செலவும் கொடுக்கவேண்டும்.


**விற்குமிடம்:–**

**இ. ஞானசேகரக் குருக்கள்**

**நம். 134, கண்டி வீதி**

**சுண்டிக்குளி போஸ்டு**

**யாழ்ப்பாணம்.**



உ

கணபதி துணை

# நூலாசிரியர் உரை

"இன்பமாய தருதிடை யோங்கவுந்
துன்பமாயது தூரத்து ணீங்கவு
முன்பராபரன் மொய்குழலோடணைந்
தன்பினீன்ற வோரானையைப் போற்றுவாம்."

உ + ரை:—

இன்பமாயது இடையறாது ஓங்கவும் என்பது:— மனோரதமான நன்மைகள் மேன்மேலும் உண்டாகவும். துன்பமாயது தூரத்துள் நீங்கவும்– எ–து :- தாபத்திரயங்களினாலே வரும் இடையூறுகள் தூரத்தின் கண்ணே நீங்கவும்; முன்பராபரன் மொய்குழலோடு அணைந்து அன்பின் ஈன்ற ஓரானையைப் போற்றுவாம். எ–து:— ஆதிகாலத்திலே பரமசிவன் பராசத்தியோடுகூடி அன்புடனே பெற்றருளிய ஒப்பில்லாத விக்னேசுரனாகிய யானையைத் துதிப்பாம் என்றவாறு.

குருவணக்கம்

"ஊரிலான் குணம் குறிஇலான்
செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான
பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான்
மேலிலான் றனக்கு
நேரிலான் குகக்கடவுளாய்
என்னுளே நின்றான்."

அநாதி மல முத்த விபுத்துவப் பொருளாய் உரு, குணம், குறி, செயல், பெயர் முதலியன இல்லாராய், ஒப்புயர்வின்றி ஆன்மாக்களின் இருதய புண்டரீக வீடாகும் தகராலயத்தின் கண்ணே சிதாகாயப் பொருளாயிருப்பவர் குகப்பெருமானே. அன்றியும் சிவனே குகன்; குகனே சிவன் எனக் கூறும் பதிநூல்களெல்லாம் இக்கருத்துப்பற்றியே,

"ஈசனே யவனுடலான் மதலையாயினன்கா
ஞ்சிலாவவ னறுமுகத்துண்மையாலறிநீ
பேசிலாங்கவன் பரனொடு பேதகனல்லன்
றேசுலாவகன் மணியிடைக் கதிர்வருதிறம்போல்."

என்று கூறிற்றுக் கந்தபுராணமும்,

'ஆதலினமது சத்தி அறுமுகனவனும் யாமும் பேதகமில்லை' எனவரும் வாக்கியங்களும் இதனை வலியுறுத்தும். தேவி திருமுகம், ஒன்றும், சிவபெருமான் திருமுகம் ஐந்தும்சேர்ந்து ஆறுமுகமாயிருத்தல் போல சிவபெருமானது திருமுகம், திருக்கரங்கள், திருக்கண்கள் என்னும் இவையை ஒருங்கெண்ண முப்பதாகல் போலச் சுப்பிரணியக் கடவுளின் திருமுகங்கள், திருக்கரங்கள், திருக்கண்கள் என்னும் இவையையொருங்கெண்ணமுப்பதாகலால் தாரகாக்கன் முதலிய அசுரர் புரங்களையும் காமனையும் சிவபெருமான் புன்னகையானுந் திருவிழியானும் எரித்தழித்தாற்போலச் சுப்பிரமணியக் கடவுளும் அசுரசேனைகளின் புரங்களைப் புன்னகையானும் திருவிழியானும் அழித்தருளலால் சிவபெருமானுக்கு முச்சத்தியிருத்தல், சிவன் குகபரப் பிரமத்திற்கும் வள்ளியம்மையாராம் இச்சா சத்தியும் தெய்வயானையம்மை யாராம் கிரியா சத்தியும் வேற்படையாம்

ஞானசத்தியும் இருத்தலால் சிவபெருமான் யோக போக, வேக மூர்த்தங்களையும் அருவம், உருவம், அருவுருவம் என்னும் முத்திறத் திருமேனிகளையும் கொண்ட குகப்பெருமானும் அவற்றைக்கொண்டமை யானும், சிவபெருமான் பஞ்ச கிருத்தியங்களையும் நடத்துவது போல இவரும் நடத்திவருவதாலும், இன்னன பல வேதுக்களாலுஞ் சிவனும் குகனும் ஒருவரேயென்க. வேதமும்,

"அவனே மகேசுரன்; அவனே உமை: அவனே விநாயகன்; அவனே ஸகந்தன்" என்பது போதர,

"யச்ச மகேச்வர யாசோமா; யச்ச விநாயக; யச்ச ஸ்கந்த"

எனப்பஞ்ச ருத்திரங்களுளொன்றான அதர்வ சிரசுஎன்னும் சாகையானும் "நீயே பெண், நீயே ஆண்; நீயே குமாரன்" என்பது போதர,

"த்வம் ஸ்திரீ த்வம்புமாநசி, த்வம் குமார"

எனச் சுவேதா சுவதரச் சாகையானும் சிவனே கந்தனென உணர்த்திற்று. இவ்வுண்மையை யுணராது கந்தன் பரசிவனல்லன், அவன் பாலனே என்று கொண்ட சூரபதுமன், தாரகன், பானுகோபன், அக்னிமுகன், வச்சிரவாகு முதலிய அசுரர்கள் தங்கள் குலத்துடன் தாமழிந்ததையும் பொய்யாமொழி முதலாயினோர் அச்சுறுத்தப்பட்டதையும் உணர்ந்தவர் குகன் சிவனெனக் கொண்டுய்வார்.

இத்தகைய சிறப்பினையுடைய பரமநாதனும் குகக்கடவுளார் கலியுகத்திலே விசேட பிரத்தியக்ஷ தெய்வமாகவிருந்து அன்பர்களுக்கருள் புரிவதால் கலியுகவரதர் எனவுங் காரணப் பெயருற்றார். தமிழ் நாட்டகத்தார் பெரும்பாலும் அவரைத் தொழலும் அவர் புகழ் பேசலும் கேட்டலும் செய்துயின்றார். ஆதலிற் பாவயுகமாகிய இக்கலி

காலத்தே யிருமையின்பமும் எளிதிற் பெறவேண்டியோர், வேண்டியார் வேண்டுவன வெல்லா மீயும் இக் கலியுக வரதரைத் தொழுதல் ஆவசியகமாம். அங்ஙனம் தொழுவார்க்கு அன்பு வேண்டும். அன்பும் அவரது மெய்ப் புகழாகிய பிரபாவங்களைச் செவ்வனே அறிதலால் மனதில் நிலையுறும். ஆதலால் அளவிறந்து விளங்கும் சுப்பிரமணியரது பிரபாவங்களை யெல்லாம் எடுத்துரைத்தலும்; உரைத்த வழி உணர்த்தலும் சிற்றறிவினோர்க்கியாலாதென்பது எவருமறிந்ததொன்றே.

ஆயினும், எவர்க்கும் அப்பிரபாவத்தினது பொருள் விளங்கக் கூடியதாக ஒரு நூல் இயற்ற வேண்டும் எனக்கருதி, கந்தப்புராணம் முதலிய பல நூல்களில் ஆராய்ந்து திரட்டி எழுதிச் சுப்பிரமணியப் பிரபாவம் என்று இந்து சாதனத்தமிழ் பத்திரிகையில் பிரமோதூத வருஷம் ஐப்பசி மாதம் 14-ந் திகதி ஆரம்பித்து பிரமோதூத வருஷம் மார்கழி மாதம் 3-ந் திகதி வரையும் முறையே திங்கள், வியாழன் ஆகிய வாரங்களில் பிரசுரிக்கப்பட்டு வந்தது எவரும் அறிந்த விஷயமாகும். அவைகளைப் புஸ்தகரூபமாக அச்சிட்டு வெளியிட்டால் பலருக்கும் வழிபாட்டிற்குரிய நூலாக இருக்குமென்று கருதி இச் சுப்பிரமணியப் பிரபாவத்தை வெளியிடுதலால் அக்கடவுளுடைய பிரபாவங்களை எல்லோருமறிந்து அக்கடவுளில் மெய்யன்பைச் செலுத்தி வழிபடுதற்கு இந்நூல் ஓர் வழிகாட்டியாக இருக்குமென்று இதனை எழுதலானேன். இச் சுப்பிரமணியப் பிரபாவத்தில் அவருடைய நாமங்களையும் பின்பு அவருடைய அங்க, பிரத்தியங்க, சாங்க உபாங்கங்களையும், இச்சா சத்தி, கிரியாசத்தி ஆகிய இரு சத்திகளினதும்

வரலாறுகளையும், ஞானசத்தியாகிய வேலாயுதத்தின் வரலாறுகளையும், வாகனமாகிய மயிலினது பூர்வ சரித்திரங்களையும், சூரபதுமன் ஆகியோரது முற் ஜன்ம வரலாறுகளையும், பின்பு தவம் செய்து தாம் விரும்பியபடி அடைய வேண்டிய பதவிகளை அடைந்தமையையும், பின்பு சுப்பிரமணியக் கடவுளோடெதிர்த்து யுத்தம் செய்து அப்பெருமானது கிருபா கடாட்சத்தாலும், பூர்வ ஜன்ம வரப்பிரசாதத்தாலும், தாம் தாம் விரும்பிய பதவிகளை அடைந்தமையையும் அக்கடவுள் செய்துள்ள அதியற்புதங்களையும், அவரை மெய்யன்போடு வழிபட்டோர் அடையும் பெறுபேறுகளையும், மேற்கோள்களோடும் விளக்கியிருப்பதைக் காண்க. இதுவன்றியும் நக்கீரர் அருளிச் செய்த மந்திர முருகாற்று, எதிர்முருகாற்று எனுமிரண்டையும் பலரும் காலை, மாலை நேரங்களில் பாராயணஞ்செய்வதற்கு உபயோகமாகுமெனக் கருதி இத்துடன் இணைத்திருக்கின்றேன். இதனை அருணகிரிநாதர் தான் இயற்றியவரென்று சிலர் அபிப்பிராயப் படுகின்றனர். சகலருக்கும் பாராயணத்திற்கு ஏற்ற நூலாயிருத்தலால் யார் இயற்றினும் சரி என்று ஒப்புக் கொள்வதே முறையாகுமென்று யான் கருதுகின்றேன்.

சுபமஸ்து

யாழ்ப்பாணம். இ. ஞானசேகரக்குருக்கள்

சிவமயம்

# சிறப்புப்பாயிரம்

சைவசமய முதல்நூல்கள் வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம். அவை சிவபெருமானால் அருளிச் செய்யப் பட்டன. பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் இயல்பை அவை விரித்துக் கூறுவன. சாதாரண மக்கள் வேதம், சிவாகமங்களைக் கற்றுப் பதி, பசு, பாச இயல் புகளை அறிய மாட்டார்கள். அவர்கள் அவ்வுண்மைகளை அறிதற் பொருட்டே அவற்றைப் பொதிந்து கதைகளாகப் புராணங்கள் விரித்துக் கூறுகின்றன. கந்தப்புராணம் என்னும் நூல் அவ்வுண்மைகளையே வற்புறுத்திக் கூறு கின்றது. அந்நூல் மேலும் முருகப்பெருமானுடைய திருவவதாரத்தையும், திருவிளையாடல்களையும், சூரபன்மனு டன் போர் செய்து அவனைச் சங்காரஞ் செய்து தேவர் களைச் சிறை மீட்டமையையும், தெய்வானையம்மையையும் வள்ளிநாயகியாரையும் திருமணம் செய்தமையையும், வேலாயுதத்தினுடைய பராக்கிரமத்தையும், தவத்தினுடைய மேன்மை முதலியவற்றையும் விரிவாகக் கூறுகின்றது.

முருகப்பெருமானும், சிவபெருமானும் வேறல்லர். சிவனே முருகன், முருகனே சிவன் முருகப்பெருமான் சிவபெருமானைப் போல் பஞ்சகிருத்தியஞ் செய்ய வல்ல வரெனவும் அவரை வழிபடுகின்றவர்களுக்கு மலபரிபாகம் வருவித்து முத்தியளிக்க வல்லவரெனவும், அவரே பரம் பொருளெனவும், கந்தப்புராணத் திருவிருத்தங்கள் வாயிலாகச் செவ்வனே அறியலாம்.

" ஈசனே யவனுடலான் மதலையாயினன் கா
ணுசிலா வவனறு முகத்துண்மையாலறி நீ
பேசிலாங்கவன் பரனொடு பேதகனல்லான்
நேசுலாவகன் மணியிடைக் கதிர்வருதிறம்போல் "

" ஈட்டுமன்னு யிரெவற்றிற்கு மிருவினைப்பயனைக்
கூட்டுவானனுங்கவை துலையெனக் கூடின்
வேட்ட மேனிலைக கதி புரிவான் மேலாய்க்
காட்டுவான் முதற் றிறமெலாமாங்கவன் கண்டாய்.

என வருஞ் செய்யுட்களால் கந்தசுவாமி சிவனுக்கு வேறல்லர் என்பது துணியப்படும்.

இவ்வுண்மைகளை யெல்லாம் சைவசமய ஒழுக்கமும் சைவசமயப் பற்றும் வடமொழி தென்மொழி யுறபத்தியும் நிரம்பிய சிவ ஸ்ரீ இ. ஞானசேகரக்குருக்கள் அவர்கள் தெளிவாகவும் விரிவாகவும், வேதம், சிவாகமம் சைவ சமயத்திலுள்ள தமிழ் நூல்கள் ஆகியவற்றைப் பிரமாணமாகக் கொண்டு எழுதிப் புத்தகரூபமாக வெளியிட்டிருக்கின்றார்கள். சிவபெருமான் ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டுக் கொள்ளுகின்ற திருவடிவங்களே மூர்த்தங்கள் எனப்படும் சுப்பிரமணியப் பெருமானுடைய தோற்றமும் சிவபெருமானுடைய அருள் வடிவமே. வள்ளிநாயகியார் சுப்பிரமணியப் பெருமானுடைய இச்சாசத்தி, தெய்வானையம்மன் அவருடைய கிரியாசத்தி, வேலாயுதம் அவருடைய ஞானசத்தி. இந்த உண்மைகளை யெல்லாம் படிப்பவர் விளங்கும் இலகுவான நடையில் எழுதியிருக்கின்றார். தாம் கூறுவனவற்றை வலியுறுத்தும் நோக்கத்துடன் நா. கதிரவேற்பிள்ளையவர்கள் இயற்றிய சுப்பிரமணிய பராக்கிரமத்திலுள்ள, சுப்பிரமணியப்பெருமான் தேவர்களிடத்து வித்வதாபூலம் பெற்ற வரலாற்றை, இந்நூலில் அநுவதித்திருக்கின்றார்.

சுப்பிரமணியப்பெருமானை அடியார்கள் காலைமாலைகளில் பாராயணஞ் செய்து அவருடைய திருவருளையடைதற்காக இந்நூலின்பிற்பகுதியில் மந்திர முருகாற்று, எதிர் முருகாற்று என்னும் தோத்திரங்களையும் சேர்த்திருக்கின்றார்கள்.

இந்நூலைக் கட்டுரை வடிவமாக, ஆசிரியர் பிரமோதூத ௵ ஐப்பசி 14-ந்தேதி தொடக்கம் பகுதி, பகுதியாக இந்துசாதனத்தில் பிரசுரம் செய்தார்கள். இக்காலத்தில் புராணங்களில் மக்கள் அவநம்பிக்கையுடையாரென்பதையும், அதனால் கடவுள் பக்தி குன்றி வருதலையும் அறிந்து அவர்கள் அக்குறைகளைத் தவிர்த்து முருகப்பெருமானிடத்தில் பக்தி அடையுமாறு பரோபகாரமாக இக் கட்டுரையை ஆசிரியர் புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கின்றார்கள். சைவமக்கள் இந்நூலைப் பெற்றுப் படித்து நற்கதியடைவார்களாக.

சைவ பரிபாலன சபை
யாழ்ப்பாணம்.
விளம்பி ௵ ஆவணி 22

மு. மயில்வாகனம்
சமயப் பிரசார அமைச்சர்.

உ

# ஓர் விஞ்ஞாபனம்.

## எமது அடுத்த வெளியீடுகள்.

' சிவவழிபாடு '

' சிராார்த்த விதி '

என்னும் இவ்விரு நூல்களையும் திருவருளை முன்னிட்டு அச்சிட்டு வெளியிடலாமென்று தீர்மானித்திருப்பதால் அதற்கு வேண்டிய பொருளுதவி செய்து அதனைப் பூர்த்தி செய்து வைக்கும்படி அறிவிற் சிறந்த பெரியோர்களையும் தருமசீலர்களையும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

இ. ஞானசேகரக்குருக்கள்

சிவமயம்

# சுப்பிரமணியக் கடவுளின்
# பிரபாவம்

எல்லாவறிவும், எல்லா முதன்மையும், எல்லா வநுக்கிரகமுமுடைய பரம்பொருள் (சிவபெருமான்) மனம் வாக்குக்கதீதராய் ஊர், பெயர், குணம், குறி, செயல், வரவு, போக்கு, ஒப்பு இலாதோராய்; உருவு, அருவுருவு, அருவுகடந்தோராய் உள்ளவர்.

இவ்வுண்மை சுவேதாசுவதரோபநிடதம்:

"அபாணிபாதோஜவனோக்ருஹீதாச் யத்யசட் சுஸ்ருணோத்யகர்ணஸவேத்தி வேத்யம் நதஸ்யாஸ்திவேத்தா"

இ-ள். கையின்றிப் பற்றுகின்றவரும், காலின்றிச் செல்பவரும், கண்ணின்றிப் பார்க்கின்றவரும், காதின்றிக் கேட்பவராயுமுள்ளார். (சிவபிரான்,) அவர் அறியப்படாததை யறிகின்றார். அவரை யாருமறிந்திலர்.

கைவல்யோபநிஷத்

"அபாணி பாதோ ஹமசிந்த்ய சக்தி பச்யாம்ய சட்சு: ஸச்ருணோம்ய கர்ண"

இ-ள்: கைகால் இல்லாதவரும் நானே, அவரது நினைத்தற்கரிய சத்தியும் நானே, கண்ணில்லாமற் பார்க்கின்றேன், காதில்லாமற் கேட்கின்றேன்.

தேவாரம்,

"........................................................................

........................................................................

ஒப்புடையனல்ல னொருவனல்ல
னோருரனல்ல னொருவமனில்லி
அப்படியு மந்நிறமுமவ் வண்ணமு
மவனருளே கண்ணகக்காணினல்லா
லிப்படியன் இந்நிறத்த னிவ்வண்ணத்தன்
இவனிறைவனென்றெழுதிக் காட்டொணாதே"

திருவாசகம்,

"ஒருநாமமோருருவமொன் றுமில்லார்க்கு"

கந்தபுராணம்,

"ஊரிலான் குணங்குறியிலான் செயலிலானுரைக்கும்
பேரிலானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல்போக்கிலான் றனக்கு
நேரிலானுயிர்க்கடவுளாயென்னுளே நின்றான்."

"நோக்கினு நுழைகிலை"

என்பனவற்றால் விளங்கும்.

இவ்வியல்பினையுடைய பரம்பொருள் ஒரு தின் மலதேகங்கொண்டருளினர் அதனியல்புகளை,

''கைலாஸசிகராவாஸ மோங்கார ஸ்வருபிணம் மஹாதேவமு மார்த்தக்ருகசேகரும் ஸோமசூர் யாக்நிநயநமனந்தேந்து ரவிப்ரப்ம் வ்யாக்ரசர்மாம் பரதரம் மர்க்ஹஸ்தம் பஸ்மோத்தூளித விக்ரஹம் த்ரியக் த்ரிபுண்டரரேகா விராஜமான பாலப்ரதேசம் ஸ்மிக சம்பூரண பஞ்சவிதபஞ்சாநந வீராஸநடம்'' என்றும், ''உமாஸகாயம் பரமேச்வரம் பிரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரசாந்தம்''

என்று கூறிய உபநிஷதங்களாலும்,

ஆகத்தோர் பாம்பசைத்து வெள்ளேறேறி
யணிகங்கை செஞ்சடைமேலார்க்கச்சூடிப்
பாகத்தே பெண்ணுடைய ராணுமாவார்
பசுவேறியுழிதரு மெம்பரமயோகி
காமத்தா லிங்கணையான் றன்னை
வழக்கனலா வெரிவிளித்தகண் முன்றுனே
ரோமத்தா ஞுன்மறைக ளோதலோவா
வொளிதிகழு மொற்றியூருறைகின்றுரே.

என்னும் தேவாரத்தானும்,

கந்தபுராணம்,

''மைக்களமு மான்மழுவும் வரதமுடனபயமுறு
மெய்கரமு நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணுஞ்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறையாங்காண முன்னின்றே யருள்புரிந்தான்.''

என்னுஞ் செய்யுளானுமறிக.

பரப்பிரமமாகிய சிவபெருமான் ஒரு நின்மல தேகங்கொண்ட ஏது, ஐந்தொழில் நடாத்தி உயிர்களுடைய பாசத்தை வீட்டி வீடுபேற்றை யருளுதற்கும் அடியார்கள் தியான பூசாதிகள் செய்து உய்தற்குமாம்.

இதனை 'யோகிஞஞ்சய தீஞஞ்ச'
என்னும் மூதலையுடைய வாதுளாகமச் சுலோகத்தால் அறிக.

கந்தபுராணத்தில்

"தன்னை நேரிலாப் பரம்பொருடனியுருக் கொண்டதென்ன காரணமென்றியேல்";

"ஒன்ருயிருதிறமாய்"

"இருபதின் மேலுமைந்து"

என்னுஞ் செய்யுள்களாலும் அறிந்து கொள்ளலாம்.

சிவபெருமான் இந்நின்மல மூர்த்தமேயன்றி நிலம், நீர், தீ, வளி, வெளி, ஞாயிறு, திங்கள், உயிர் என்பனவாயும் நின்றருள்வர். (நிலம் முதலிய எட்டும் அவருடைய அட்டமூர்த்தமாம்.)

உபநிஷத்தில்

"ப்ரதிவ்யோபவ ஆபச்சர்வ ஆக்நேருத்ரவாயுர்ப்பீம ஆகாசஸ்ய மஹாதேவ சூர்யஸ்யோக்ர சந்ரஸ்ய சோம ஆத்மாக பசுபதி" எனவரும்.

திருநாவுக்கரசுநாயனர் அருளிச்செய்த நின்ற திருத்தாண்டகம் முழுதும் இக்கருத்தேயாம். மற்றைய நாயன்மார்களின் திருவாக்குகளினு மிக்கருத்துப் பரக்கக் காணலாம்.

கந்தபுராணத்தில்

"விட்டவிட்டதோர் படைக்கெலாம்"

என்னுஞ் செய்யுளாலும்,

"காலாய்வெளியாய்" என்னும் செய்யுளாலும்,
"ஊனாகியூனுளுயிராகி" என்னும் செய்யுளாலும்
"பாராகி யேனைப் பொருளாய்"

என்னுஞ் செய்யுளாலும் உணரத்தகும்.

சிவபெருமான் சுத்த தத்துவங்களிலே கொண்டருளுமூர்த்தம்: கோரமூர்த்தம், சிவமூர்த்தம் என இரண்டு வகைப்படும். கோரமூர்த்தத்தினை நிக்கிரக மூர்த்தமெனவுஞ்; சிவமூர்த்தத்தினை அநுக்கிரக மூர்த்தமெனவுங் கூறுவாருமுளர். நிக்கிரகமூர்த்தம், அநுக்கிரகமூர்த்தம், நிக்கிரகாநுக்கிரகமூர்த்தம் என மூன்றென்பாருஞ் சிலருளர்.

கோரமூர்த்தமாவது: உயிர்களுடைய வினையை வீட்டுதற்குக் கொண்டருளும் மூர்த்தம். சிவமூர்த்தமாவது: உயிர்களுக்குப் போகத்தை ஊட்டுதற்குக் கொண்டருளும்மூர்த்தம். வைரவ வீரபத்திர மூர்த்தங்கள், பிரமன், தக்ஷன் முதலாயினோருடைய சிவதூஷண, சிவத்துரோக வினையை வீட்டுதற்கு எழுந்த மூர்த்தங்களாதலிற் கோரமூர்த்தங்களாம்.

விநாயக, சுப்பிரமணியமூர்த்தங்கள், கயமுகன், சூரன் முதலானோரால் எய்திய இடையூறுகளின்று நீக்கித் தேவர்களுக்குப் போகமூட்டுதற்கு எழுந்த மூர்த்தங்களாதலிற் சிவமூர்த்தங்களாம்.

சிவபிரான் ஒருவரை அழித்து மற்றொருவரைக் காத்தல் குற்றமாகாமை.

கந்தபுராணம்.

"பெற்றிடுங் குரவரானோர் பிள்ளைகடம்பானோயொன்
றுற்றிடிற்பிறரைக்கொண்டு முறுதுயர்செய்து தீர்ப்பர்
மற்றவர் தம்பாலன் போவன்கனேவது போனம்பாற்
பற்றியபவங் கடீர்ப்பான் பரமனுமிவைகள் செய்தான்."

என்னுஞ் செய்யுளாலும்,

"நந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள்" என்னும் சித்தியார்ச் செய்யுளாலும் அறியலாம். செய்கையினாலே கோபம் போலத்தோன்றினுங் கருத்து வகையான் அவை அருளேயாம்.

சிவபெருமான் சுப்பிரமணிய மூர்த்தங்கொண்டது.

"தன்னிகரின்றி மேலாய்த் தற்பரவொளியாயாரு
முன்னரும் பரமாய்நின்ற ஒருவனே முகங்களாறும்
பன்னிரு புயமுங் கொண்டு பாலகன் போன்றுகந்த
னென்னுமோர்பெயருங்கொண்டுயாவருங்காணவந்தான்"

எனவும்,

"பங்கய முகங்களாறும் பன்னிரு புயமுங்கொண்டே
யெங்கடம் பெருமான்போந்தவேதுமற்றென்னையென்னிற்
செங்கண்கலுந்திபூத்தோன் சிறுமையு மகவான்றன்பு
மூங்கடஞ் சிறையுநீக்கி யுலகெலா மளிப்பக் கண்டாய்"

எனவும்,

"புரந்தரன் குறையயன் முதலமரர்தம் புன்மை
வருந்தும் வானவர் சிறையெலா நீக்கி மற்றவர்தந்
திருந்து தொல்லிறை யுதவுவன் செந்திமாநகர்வந்
திருந்தவாதியம் பண்ணவனடியனேன் யானே"

எனவும் போந்த கந்தபுராணச் செய்யுட்களாலு முணர்த்தப்பட்டது.

இச்சுப்பிரமணியக் கடவுளுக்குரிய திருநாமங்கள் எண்ணில்லாதன. சங்கரசங்கிதையில் அவர் சர்வதேவஸ் வரூபரும் சகலப்பிராணிஸ்வரூபரும் நித்தியருமாகிய பிரமஸ்வரூபரு மாகின்றார்.

(ஸர்வதேவாத்மகஸ்கந்த ஸர்வலோகாத்மகஸ்ததா ஸர்வபூதாத்மகச்சாயம் சாக்ஷாத்ப்ர்மஹஸநாதனம்) எனவும், சம்பவகாண்டம் 31-ம் அத்தியாயம், 6-ம் சுலோகம் முதல் 11-ம் சுலோகம்வரையும் யுத்த காண்டம் 35-ம் அத்தியாயம் 4-ம் சுலோகம் முதல் 14-ம் சுலோகம்வரையும்கூறியபடியும், கந்தபுராணம் திருவிளையாட்டுப்படலம் 88-ம் செய்யுள் முதல் 100-ம் செய்யுள் வரையும் சூரபன்மன் வதைப்படலம் 421-ம் செய்யுள் முதல் 451-ம் செய்யுள் வரையுங் கூறியபடியும் எல்லாக்கடல்களும்,எல்லா உலகங்களும்,எல்லாத் திக்குகளும், எல்லாப் புவனங்களும், எல்லா அண்டங்களும்,எல்லாத் தேவர்களும், எல்லாரிஷிகளும்,எல்லா மணிகளும்,எல்லாஒஷதிகளும்,எல்லாச்சீவராசிகளும், வேதாகமாதி எல்லா வித்தைகளும், உம்கார, பட்கார, ஸ்வாஹாகார, சுவதாகார, வஷட்கார, வெளஷட்காராதியெல்லா மந்திரங்களும், இன்னுமுள்ளனவெல்லாம், அக்கடவுளுடைய வடிவமேயாதலின், எல்லாப் பெயர்களும், அவற்றின் எல்லாப் பரியாயநாமங்களும் பொருந்தும். அந்நாமங்களுள் பல தேவர்களும், முனிவர்களும் பிரித்தெடுத்து ஸகஸ்ரநாமம் எனவும் "மூலமந்திரத்ரிசதி எனவும், அஷ்டோத்தர சதம் எனவும், அக்ஷ ர நா ம ம்" எனவும், ஷோடச நாமம் எனவும் பெயரிட்டு அவற்றைத் தாம்தாம் பாராயணஞ் செய்தும், அவற்றால் அக்கடவுளைப் பூசித்துப்

பெற்றவரங்களையும், அவ்வாறு செய்வோர் அடையும் இம்மை, மறுமைப் பேறுகளையும் அவற்றினிறுதியினுள்ள பல ஸ்மிருதிகளிற் கூறியிருக்கின்றார்கள்.

அக்ராமங்களுள் பல சங்கர சங்கிதையினும், கந்தபுராணத்தினு மெடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சில கூறுவாம்.

கந்தன்— (1) சேர்க்கப்பட்டவன். (2) சத்துருக்களை அழிப்பவன். கார்த்திகேயன் — கார்த்திகைகளின் புத்திரன். அக்நிபூ — (1) சிவன் அடியார்களை அக்கிரத்திற் கொண்டுவருபவராதலின் அக்நி எனப்படுவர். அவ்வியல்புடைய சிவனிடத்திற் பிறந்தவன். (2) சிவனுடைய அக்கினி நேத்திரத்திற் றோன்றினவன். (3) அக்கினி தேவனால் தாங்கப்பட்டவன். குகன் —(1) வேத வேதாந்தங்களின் தஹராகாசமானது (ஹிருதய கமலத்துள்ள வாகாசம்) குகை என்று சொல்லப்படும் ஸகல ப்ராணிகளுடைய ஹிருதய கமலங்களில் வசிப்பவன். (2) தன் சேனைகளைக் காப்பவன். மஹாசேனன் மஹாசேனைகளாகிய ஜீவர்கள் அந்தரங்க புத்தியோடு நமஸ்கரிக்க அவர்களைத் தன் சுயாதீனத்தில் வைத்திருப்பவன். காங்கேயன் — கங்கையின் புத்திரன். சாமி—எல்லாமுடையவன். குமாரன்— (1) அருவருப்புகளை யழிப்பவன்; (2) என்றும் இளமையை உடையவன். சுப்பிரமணியன் — சிவன் பிராமணர்களுக்கும் வேதங்களுக்கும் முக்கிய தெய்வமாதலின் ப்ர்மஹண்யர் எனப்படுவர். அவரினும் பார்க்க பிராமணர்களுக்கு மிக முக்கிய தெய்வம் வேள்—விரும்பப்படுபவன்.

**ஆறுமுகன்** (1) சர்வஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசக்தி, அநந்தசக்தி, சுவதந்திரத்துவம் என்னும் அருட்குணங்களை ஆறுமுகமாகவுடையவன்; (2) பரமசிவனுடையஐந்துமுகங்களும் உமாதேவியின் ஒருமுகமுஞ் சேர்ந்த ஆறுமுகம் (3) பிரமா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன், பரப்பிரமம் என்னும் அறுவருடைய ஒவ்வோர் முகமுஞ் சேர்ந்த ஆறுமுகமுடையவன். [இவ்வாறுமுகங்களின் பெயர்களாவன:—வசத்பு, புவத்பு, ஜகத்பு, விச்வபு, ப்ரம்ஹபு, அக்நிபு என்பனவாம்] **சரவணபவன்**—(1) சரவணவாவியிற் பிறந்தவன்; (2) நாணற்காட்டினடுவிலுள்ள வாவியின்கணலர்ந்த செந்தாமரை போன்ற முகங்களுள்ளவன், இவ்வகை சுப்பிரமணியக்கடவுளின் திருநாமங்களை எடுத்துச் சொல்லப்புகின் பலகோடிகாலஞ் செல்லும்.

இங்கே சொல்லிய பெயர்களுள் ஸ்கந்தகுமார "ஸுப்ர்மண்ய" என்பனவே மிகுதியும் வேதோபநிஷத்துக்களில் வருவன. "சரவணபவ" என்பதே அக்கடவுளுடைய மஹாமந்திரம். சிலர் இம்மந்திரத்தை "சரவணபவ" என்று ஜபித்தல்கூடாது. "சர அண பவ என்றே" ஜபித்தல் வேண்டுமென்கிறார்கள். அவர்கள் அவ்வாறு சொல்லுமேது. 'வ' என்னும் எழுத்து இரண்டுமுறை வருதலாம். இதனைச் சிறிது ஆராய்வோம். சரவணபவ என்பதில் மூன்றாவதாகவரும் 'வ' என்னும் எழுத்தின் பொருளும், பலனும், அதிதேவதையும், நிறமும், தொழிலும் வேறு. இறுதியிலுள்ள "வ" என்னும் எழுத்தின் பொருளும், பலனும், அதிதேவதையும் நிறமும், தொழிலும் வேறு. இம்மந்திரத்தில் முன்

வந்த எழுத்துப் பின்னும் வருவது குற்றம் என்று, முன்னையதை வேறெழுத்தாக மாற்றுபவர்கள் ஸ்கந்தகாயத்திரி, மயூரகாயத்திரி, சுசகாயத்திரி, கணபதிகாயத்திரி முதலிய காயத்திரிமந்திரங்களி லும், விநாயகர், விஷ்ணு முதலிய மூர்த்திகளின் மூல மந்திரங்களிலும், முன் வந்த எழுத்துக்கள் பின் னும் வருகின்றனவே? அவைகளையும் மாற்றுவார் கள் போலும். குமார தந்திரத்தில் மந்திரோத்தார விதிப்படலத்திலும், யந்திரோத்தாரத்திலும், கல்ப பத்திலும், ஷடாக்ஷரமாலிகாஸ் தவத்திலும், மாலா மந்திரத்திலும், மூலமந்திரத்திரிசதியிலும்; அஷ்டோத் தர நாமத்திலும், ஸகஸ்ர நாமத்திலும், அக்ஷர மாலிகையிலும், புஜங்கத்திலும் "சரவணபவ" என்றே சொல்லியிருக்கின்றது. இவ்வுத்தமோத்தம மகாமந்திர ஜபவிசேஷத்தால், இம்மையிலேபிரமா படைத்தற் றொழிலையும், விஷ்ணு காத்தற்றொழிலே யும், இந்திரன் தேவராசத் தன்மையையும், அக்கினி முதலியோர் திக்பாலகத்துவத்தையும், அகஸ்தியர், நாரதர், வாமதேவர் முதலியோர் வேண்டிய பேறு களையும்; முசுகுந்தன், இராமர், கிருஷ்ணர் முதலிய இராசாக்கள் இஷ்டசித்திகளையும்; அருணகிரிநாதர், குமரகுருபரசுவாமி முதலியோர் நோய் நீக்கத்தோடு, நா வல்லமையினையும், மறுமையிலே நிரதிசயானந்த முத்தியையும் பெற்ற சரித்திரங்கள் அநேகமுள.

சுப்பிரமணியக் கடவுளுடைய உருவத்திருமேனி யைச் சுட்டிச்சிறிது பேசுவாம். அக்கடவுளுடைய சிரம், முகங்கள், இருதயம், என்னும் அங்கங்களும், வக்ஷஸ், கண்டம், ஸ்தனங்கள், புயங்கள், நாபி,

உதரம், குஹ்யம், கண்கள், நாசிகள், செவிகள், கைகள், பாதங்கள், விரல்கள், தொடைகள், முழங்தாழ்கள், கணைக்கால்கள் என்னும் பிரத்தியங்கங்களும்; வேல், குலிசம் முதலியசாங்கங்களும், உடைமாலை கந்தம், ஆபரணம், உபவீதம், ஆசனம் உபாங்கங்களும்; ஆன்மாக்களுக்கு உண்மையை விளக்கும் பேரருள் வடிவமென்பதும். எல்லாமாயல்லதுமாய் நிற்கும் எம்பிரான் தன்பயன் கருதிக் கொண்டமையன்றென்பதும், உண்மை நூற்றுணிபு. அவற்றுட் சில சிறிது காட்டுகின்றோம்.

சுப்பிரமணியக் கடவுளின் முண்டகமலர்ந்தன்ன மூவிருமுகங்களினியல்பு; முன் ஆறுமுகன் என்னும் சொற்குப்பொருள் விரித்த இடத்திற் கூறினும்; ஆண்டுக்காண்க.

ஒவ்வொரு முகத்திற்கு மும்மூன்று கண்களாகப் பதினெட்டுக் கண்களுள. ஸ்காந்தம் சம்பவகாண்டம் 28-ம் அத்தியாயம் 15-ம் சுலோகம் காடம்ஸ்தநந்தரே க்ர்த்வாசகாரைகம் கைதுடப்பியமுன். தவிபாதம்த்வாதசபுஜம் ஷட்ப்பியமுன். தவிபாதம்த்வாதசபுஜம் ஷட்வக்தரம்த்ரி ஷடீக்ஷணம் உமைதன் ஸ்தனத்தில், நெருக்கக் கட்டியணைத்து இவ்வாறு குழந்தைகளையும், இரண்டு பாதங்கள், பன்னிரண்டு புயங்கள், ஆறுமுகங்கள், பதினெட்டுக்கண்கள் இவைகளையுடைய ஒரே குழந்தையாகச் செய்தருளினளவும். மேற்படி காண்டம் 35-ம் அத்தியாயம் 33-ம் சுலோகம் ஷட்வக்த்ரம்த்வாதசபுஜம் அஷ்டாதசவிலோசனம் அநுக்கிரஹாயலோகாநும் ரூபமங்

கீர்த்தம்!! சுபம். ஆறு முகங்களையும் பன்னிரண்டு புயங்களையும், பதினெட்டுக் கண்களையுமுடைய அழகிய திருமேனியானது, லோகாநுக்கிரகமாக வங்கீகரிக்கப்பட்டதெனவும், போந்த பிரமாணங்களால் பதினெட்டுக்கண்கள் உண்மைகாண்க. மயூரகிரிப் புராணமும் "த்ரிஷண்ணேத்ராயநம" என்னும் மந்திரமும் மாலா மந்திரமும் இதனை நிறுத்தும். நல்லது! சுப்பிரமணியக்கடவுளுக்குக் கண்கள் பதினெட்டாயின் "படைமலிந்த மழுவாளும் மானுந் தோன்றும் பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்" என்றும், (கந்தபுராணம் தாரகன் வதைப்படலம்) நோக்கினன் பன்னிரு நோக்கங் கொண்டுளான்" என்றும், (இரண்டாம்நாட் சூரபன்மன் யுத்தப்படலம்) நெற்றி நாட்டத்தினலெலாமட்டிடுமிமலன் பெற்றமாமகன் பன்னிருவிழிகளும்" என்றும், (சூரபன்மன் வதைப்படலம்) கூறியதென்னையெனின்? முக்கணுடைய சிவபெருமானை இருவிகசிதகமல நேத்திரமுடைய புருஷர் என உபநிடதங் கூறிற்று. உமாதேவியாரை "திருமகள் வலக்கண் வாக்கின் சேயிழையிடக்கண் ஞானப் பெருமகளுதற்கணகப்பெற்று" என 3 கண்ணுடையராகத் திருவிளையாடற் புராணங்கூற கந்தபுராணம், "தண்ணார்கமலத்துணை மாதரைத் தன்னிரண்டு கண்ணுருவுடையவுமையாள்" என இரண்டு கண்ணுடையராகக் கூறிற்று. சிவபெருமானுக்கும், உமாதேவியாருக்கும் இருவிகசித கமலங்கள் போன்றிருக்கும், கண்களைச் சிலநூல்கள் கூறியும் முகுளிதகமலம்போன்றிருக்கும் நெற்றிநாட்டங்களைச் சிலநூல்கள் கூறாததும் போலவே, சுப்

பிரமணியக்கடவுளுக்கும் விகசிதகமலங்கள் போன் றிருக்கும் பன்னிரண்டுகண்களைச் சில நூல்கள் கூறின. சில நூல்கள் முகுளித கமலங்கள் போன் றிருக்கும் ஆறு கண்களையும் சேர்த்துப் பதினெட் டுக் கண்களெனக் கூறின. சிவபெருமான் எடுத்த கோரமூர்த்தங்களாகிய வைரவர், வீரபத்திரர் முத லிய மூர்த்திகட்கும்; விநாயகர் முதலிய சிவமூர்த் தங்கட்கும் சிவசாரூபம் பெற்ற உருத்திரர், நந்தி தேவர் முதலியவர்கட்கும்; உமாதேவியாரின் அம்சம் பெற்ற துர்க்கை முதலிய சத்திகளுக்கும்; முக்க ணுடைமை கந்தபுராணத்திலினிது கூறப்பட்டன. அவ்வாறு தலில் சிவனதாடலின் வடிவமாயுற்றிடுஞ் செவ்வேளுக்கு முகங்கடோறும் மும்மூன்று கண்க ளுண்டென்பதே தேற்றம். இக்கண்கள் சூரிய சந்திராக்கினிகளாம். சிவரகசியகாண்டம், அம்பவ காண்டம் 31-ம் அத்தியாயம் 7-ம் சுலோகத்திலும், ஷ்டி காண்டம் 35-ம் அத்தியாயம் 30-ம் சுலோகத்தி லும் இவ்வாறு கூறப்பட்டது. பேரொளியெலாஎன யனம் எனக் கந்தபுராணங் கூறியதுமது.

சுப்பிரமணியக்கடவுளுக்குக் கைகள் பன்னி ரண்டு. அவற்றிலுள்ள படைக்கலங்களாவன:-

வேல், தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு என்பன. இவற்றுள் தோமரம் முதலிய பதினொரு படைக்கலங்களும், பொன்றிகழ் சடிலத் தண்ணறன் பெயரும், பொருவிலா வுருவமுந் தொன்னுள் நன்று பெற்றுடைய பதினொரு உருத்திரகணத்தோர்களாம்.

வேலாயுதம் - மூன்று பத்திர முடையது. அம்மூன்றும் இச்சை கிரியை, ஞானமென்னுஞ் சத்திகளின் அடுக்காம். இவ்வாறன்றி முக்குணம், மூத்தீ, மூன்றுவேதம, முத்தேவர், மூன்றுதத்துவம், இவற்றின் அடுக்குளனிலுமாம். இவ்வாயுதத்தில்ஒவ்வோரிடங்களில் பிரமா, விஷ்ணு, ருத்திரன், மகாஸேனன், கணபதி, சாஸ்தா, சூரியன், அக்கி, கஜவல்லி, மகாவல்லி, பார்வதி, ஸரஸ்வதி, லக்ஷ்மி, பூதேவி, சுமித்திரா, மயூரம் இவர்கள் இருப்பார்கள். எம்பெருமான் யுத்தம் புரியும் பொழுது பன்னிரு கரங்களிலும், படைக்கலங்கள் தாங்கியும், மற்றையபொழுது பத்துக் கரங்களிற் படைக்கலங்களும், இரண்டு கைகள் அபயவரந்தாவிற்றிருப்பர். யுத்தம்புரியச் செல்லும்போது இருக்குமியல்பை, படையெழு படலத்திலும் அல்லாக் காலத்திருக்கு மியல்பை, சயந்தன் கனவுகாண் படலத்திலுங் காண்க.

இனி அக்கினி சக்தி ஒன்றாக வழியும் சுடப்படுவதும், விளக்கப்படுவதும், அடப்படுவதுமாகிய விஷயத்தில் சுடுவிளக்கம், அடுதலாகிய தொழிலினால் பலவாதல் போல, குமாரக்கடவுளது சத்தி ஒன்றாய வழியும், கார்த்திய பேதத்தால் இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தியென மூவகைப்படும். இச்சத்தியாவது — ஆன்மாக்களை முத்தியிலடைவிக்க விரும்புதல். கிரியாசத்தியாவது — அவ்வான்மாக்களுக்குக் கர்மசமத்துவம் பிறக்கும் பொருட்டு அக்கர்மங்களைப் பக்குவாபக்குவ மறிந்து கூட்டிப் புசிப்

பித்துத் தொலைப்பித்தல். ஞானசத்தியாவது — அவ்வான்மாக்களுடைய கர்மங்களையும் அக்கர்மங்களுக்கிடாகிய தனு, கரண, புவன, போகங்களை உபாதானரதித்யத்தினின்றுந் தோற்றுவிக்கு முறைமையையுமறிதல். அக்கடவுளுக்கு இம்மூன்று சத்திகளும் முறையே தெய்வயானையம்மை, வள்ளியம்மை, வேலாயுதம் எனச் சொல்லப்பட்டன. இச்சாசத்தி வள்ளியம்மை எனவும், கிரியாசத்தி தெய்வயானையம்மை எனவும் கூறினுமாம். ஞானசத்தி தெய்வயானையம்மை யென்பதுமொன்று வேலாயுதத்தைச் சுட்டிமுன் சொன்னோம். தெய்வயானையம்மை, வள்ளியம்மை யென்னுமிருசத்திகளைச் சுட்டிச் சிறிது சொல்வாம்.

இந்த இரண்டு சத்திகளும் விஷ்ணுவினுடைய கண்களின்றும் அமிர்தவல்லீ, சுந்தரவல்லீ என்னும் பெயர்களோடு தோன்றித் தவத்தால் எம்பெருமானை நாயகராகப் பெற்றார்கள். அமிர்தவல்லீ இந்திரனாலும் ஐராவதத்தாலுங் காத்து வளர்க்கப்பட்டமையால் இந்திரகுமாரீ, தெய்வயானையம்மை என்பன முதலிய பெயர்களைப் பெற்றார். சுந்தரவல்லீ வள்ளிக்கிழங்கு அகழ்ந்தெடுத்த குழியின் மாணின்றமையாலும், வேட்டுவராசன் வளர்த்தமையாலும் வள்ளியம்மை, குறமாது என்பன முதலிய பெயர்களைப் பெற்றார். இவ்வள்ளியம்மையாரை யீன்ற மான்லக்ஷ்மீ. அம்மானை விருப்போடு பார்த்த சிவமுனிவர் விஷ்ணு. வளர்த்த வேட்டுவராசன் உபேந்திரன். வேடர்கள் தேவர்கள். இவைகளை உபதேசகாண்டத்திற் காண்க.



யும்
த்தினையு
மூன்று
கடவுளின்
ள்ளியம்மை
லர் தாங்கிய
ாங்கவிட்ட
தங்கச்சுத்
வலப்பக்கத்

ரங்கள் மன்று.
ஆட்டு ா என் கொடி
மயிலை மரகத து.
ம்.
ன.
தர
க்கு
ன.

தெய்வயானையம்மை பொன்னிறமுடையவரும், நீலோற்பலமலர் தாங்கிய வலத்திருக்கரத்தினையும், கடிக்கீழ்த் தொங்கவிட்ட இடத்திருக்கரத்தினையுமுடையவரும், மந்தாரமாலை தரித்தவரும், மூன்று நெறிப்பினையுடையவரும், சுப்பிரமணியக்கடவுளின் இடப்பக்கத்தில் வீற்றிருப்பவருமாவர். வள்ளியம்மை மரகதநிறமுடையவரும், தாமரைமலர் தாங்கிய இடத்திருக்கரத்தினையும், கடிக்கீழ்த் தொங்கவிட்ட வலத்திருக்கரத்தினையுமுடையவரும், ஸ்தநக்கச்சுந்தரித்தவரும், சுப்பிரமணியக்கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருப்பவருமாவர்.

குமாரப்பெருமானுக்கு வாகனங்கள் மூன்று. அவை: மயில், யானை, ஆட்டுக்கடா என்பன. கொடி கோழிச்சேவலாம். மயில் மரகதநிறமுள்ளது. யானை வெண்ணிறமுள்ளது. ஆட்டுக்கடாவும், கோழிச்சேவலும் செந்நிறமுடையன. இவை குமாரதந்திரத்தும், கந்தபுராணத்தும், கந்தரலங்காரத்துங் கூறப்பட்டன. அப்பெருமானுக்கு மயில்வாகனமும், கோழிக்கொடியும் என்றுமுள்ளன. அவர் முன்னுள்ள மயில்வாகனம், ஒரு கலகம் விளைத்தமைகாரணமாக; அதாவது பரம்பொருளாகிய கந்தக்கடவுளின் திருவடிக்கீழுள்ள மயில், ஆணவத்தை யடக்குமாற்றலையும், முடியின்மேலுள்ள சேவல், அருண்ஞானமென்னும் பரஞானத்தை மேற்கொள்ளும் வண்மையையுங் குறிக்க நிற்றலான், மயில் ஆணவமெனவும் சேவல் சிவஞானமெனவுங் கூறப்படுமென்பாரும், மயிலால் ஐங்குணத்தையுடைய பிருதிவி தத்துவமும், சேவலாலொலிமயமான நாத தத்துவமுங்

குறிக்கப்படலாற் பிருதிவிமுத நாதமிறுதியாகவுள்ள தத்துவங்கட்கெல்லாந் தலைவரும் அவற்றி னீக்க மின்றி நிற்பவரும், பிரேரிப்பவரும் தாமேயென் பதை விளக்கியருளுகின்றா ரென்பாரும், மயிலாற் பொருட்பிரபஞ்சமும், சேவலாற் சொற்பிரபஞ்சமும் குறிக்கப்படல், இருவகைப் பிரபஞ்சமுந் தன் வயப் பட்டன வென்பதைத் தெரிந்தபடியா மென்பாரு மாகப் பலவாறுரைப்பார் பெரியோர். அங்ஙன முள்ள மயிற்பறவை, சேவற்பறவையென்னு மிரண் டனையுங் கொண்ட வரலாறும், முத்தியளித்த தன்மை யுங் கூறுவாம்.

முன் ஓர் கற்பகத்திற் சாகத்தீவிற்கு அரச னாகிய பிரபாகரனென்பானுக்கு ஓரிரட்டைப்பிள்ளை கள் பிறந்தனர். அந்தப்பிள்ளைகட்குச் சூரன், பது மன் எனப் பெயரிட்டான். வேறு இருகுமாரர்கள் தோன்றினர். அவர்கட்குச் சிங்கன், தாரகன் எனப் பெயரிட்டான். சூரன், பதுமன் என்னும் பிள்ளை களிடத்துச் செந்தமிழ் முனியாகிய அகஸ்தியனார் தோன்றிச் சுப்பிரமணியக்கடவுளின் மகிமைகளை யும், அவரது வாகனங், கொடிகளாகிய மயில், சேவ லென்னு மிவைகளின் பெருமைகளையு மெடுத்துரைத் தனர். அங்ஙனே திரணவிந்து முனிவர் சிங்க னிடத்துஞ், விடபயோகி என்பார் தாரகனிடத்துஞ் சென்று முறையே, துர்க்காதேவியின் வாகனமாகிய சிங்கத்தினதும், மகாசாத்தா ஆகிய, அரிகரபுத்திரனு வாகனமாகிய யானையினதும், மகிமைகளை எடுத் துரைத்தார். அவர்கள் நால்வரும் முறையே மயில், கோழி, சிங்கம், யானை என்னும் வாகனங்களாகி

அந்தக் கடவுளர்களைத் தாங்க வேண்டுமென்று விருப்பமுற்றுச் சிகுலபருவதத்திற்கு அடுத்த வனத்திலே, பஞ்சாக்கினி மத்தியினின்றும், நாற்பதினாயிர வருடம் கடுந்தவஞ் செய்வாராயினர்.

அதுகாலை தேவர்கள் யாவரும் சிவபெருமானைத் தரிசித்தற்கு விரும்பித் திருக்கைலாசமலை சென்று அதனடி வாரத்திற் றங்கள் தங்கள் வாசனங்களை விடுத்துச் சென்றனர். அப்போது கருடன், அன்னம் முதலிய பறவைகள், சுப்பிரமணியக்கடவுளின் வாகனம், கொடி இவைகளிடத்தும், துர்க்கா தேவியார் மகாசாத்தாவென்னுமிவர்களின், வாகனங்களிடத்துஞ், சென்று, மயூரருக்குட முதலிய வேந்தர்காள், நுங்கள் பதவிகளை விரும்பிப்பிரபாகர மன்னவன் குமாரர்கள் தவஞ் செய்கின்றனர் என்ன, அவர்கள் மிக்க கோபங் கொண்டு தவஞ்செய்யும் இடம் போந்து சுவாலித்தெரியுமக்கினியையவித்து, நீவிர் யாதிற்குத்தவம் புரிகின்றீர் என வினவிய காலத்து, மன்னவ குமாரர்கள் நடுநடுங்கித் தத்தம் விருப்பங்களை யவர்கட்குரைத்தார்கள். அப்போது மயில் முதலிய வாகனங்கள், நீங்கள் எம்பதங்களை இச்சித்தமையால் எங்கள் முகங்களைக் கொண்ட பூதங்களாகக்கடவீரென்று சாபமிட்டுச் சென்றனர். அங்ஙனம் அம்முகத்தைக் கொண்ட பூதங்களான மன்னவ குமாரர்கள் நால்வரும், அவைகளைப் பின்றொடர்ந்து பலவாறு துதித்துச் சென்றனர். அவைகள் அவர்கள் துதிகளைக் கேட்டிரக்கமுற்று, நீவிர் இவண் சிலகாலம் இருமின், உண்மையாய்

நுங்கள் விளைவு கைகூடுமென்ன; அவ்வாறே அப்பூதங்களனைவரும் கைலைமலைக்கண் உள்ள அண்டாவரணப்பூதங்களுடன் கூடியிருந்தனர்.

அதுகாலைத் தேவர்களெல்லாம் வந்து அசுரர்களின் கொடுமைகளைச் சொல்லியழுது அடைக்கலம் புகுந்தனர். அந்நான்கு பூதங்களும், அவர்கட்கு அபயம் கொடுத்துச் சில பூதங்களுடன் சென்று அசுரர்களையெல்லாம் பலவாறு இம்சித்துக்கொன்றார்கள். அசுரர்கட்குத் தலைவனான அசுரேந்திரன் மறைந்திருந்து கயிலையின்கட் சென்று, அப்பூதர்கள் செய்த தீங்குகளைப் பூதங்கட்கெல்லாம் தலைவனான அண்டாவரணனிடஞ் சொல்லியிரங்கினான். கணபதியன் அப்பூதர்களை அழைத்து அசுரர்களாகப் பிறந்து தேவர்க்குத் துன்பஞ் செய்யக்கடவீர் என்று சபித்தான். அவர்களங்ஙனந் தேவர்களுக்குத் துன்பஞ் செய்திருந்தனர். ஒரு காலத்து முருகக்கடவுளார் தம்வாகனத்தையுங் கொடியையுந் திருக்கயிலைச் சாரலில் விடுத்துத்தாய் தந்தையரைக் காணச் சென்றார். பரமசிவனைச் சேவிக்க வந்த பிரம, விட்டுணு, இந்திரன் முதலினோர் வாகனங்களும் அங்கிருந்தன. அவ்வாகனங்கள் மயிலையுங், கோழியையும் வந்திக்காமல், அகங்காரங் கொண்டிருந்ததை அந்நான்கு பூதங்களும், மயிலுக்கும், சேவலுக்குமறிவித்து, அவைகளோடு சேர்ந்துகருடன், அன்னம் முதலிய வாகனங்களை யெல்லாந் துரத்தி, வைகுண்டம், சத்தியலோகம், சுவர்க்கம் முதலிய வுலகங்களிற் சென்று அவைகளையெல்லாமடித்து, அழித்துக் கருடன் முதலிய வாகனங்களையும் கொண்டு, தாமிருந்த இடம் வந்து சேர்ந்தன. பரமசிவனை வந்தனித்துத் திரும்பிய தேவர்கள் தங்கள் வாகனங்

களைக் காணுமையால், நடந்தன வெல்லாங் கேட்டறிந்து மிக்கதுக்கமுடையவராய், வெளியேயெழுந்தருளிய வேலாயுதக்கடவுளின் திருமுன்னிலையில் வீழ்ந்து வணங்கி முறையிட்டனர். அவர் பூதங்கள் நான்கினையும் அசுரராகும்படி சபித்தனர். அதனால் அவர்கள் சூரன், பதுமன், சிங்கமுகன், தாரகன் என்னும் நால்வருங் காசிய முனிவர்க்கும், மாயைக்கும் பிள்ளையாகி, சூரபன்பன், சிங்கமுகன், தாரகனென மூவராய்ப்பிறந்து கந்தக்கடவுளின் வேலாயுதத்தாலும், வச்சிராயுதத்தாலுங் கொல்லப்பட்டு மயிலுங், கோழியும், சிங்கமும், யானையுமாகி அவ்வக்கடவுளர்க்கு வாகனமுங் கொடியுமாயினர்.

கந்தக்கடவுள் வாகனமுங் கொடியுமாயிருந்த மயிலுஞ், சேவலும், இராசகுமாரர்கள் செய்த தவத்திற்கு இடையூறு செய்தமையாலும், பூதங்களின் சொற்களைக் கேட்டுக் கருடன், அன்னம், யானை முதலிய வாகனங்களைக் கொன்று திரும்பிய குற்றத்தினாலும், கந்தக்கடவுளினின்றும் நீங்கி யஃமந்து அன்னவர் தந்திருவருளையடையுமுபாய மெண்ணித் தொண்டைமண்டலத்திற் சிறந்து விளங்குங் காஞ்சீபுரத்தையடைந்தன. அங்கே மயில், சேவல் என்னும் அவ்வுருவத்துடனே யனேககாலங் கந்தநாதனைக் கருதித் தவம்புரிந்து அவர் திருவருளடைந்து குகசாயுச்சியபதவியையடைந்தன.

அம்மயிலைச் சிலநாள் மலையுருவாகவிருந்து, பின் சாரூபமடையுமாறு ஆஞ்ஞாபித்தார் என்பாருமுளர். இதனை உபதேசகாண்டத்தும் மயூரகிரிப்புராணத்துங் காணலாம்.

சூரசங்காரகாலத்தில் இந்திரன் மயில் வாகன மாகவும், அக்கினி கோழிக்கொடியாகவுமிருந்தார் கள். மயில்வாகனங் கொண்டது விந்துதத்துவத் தின் மேற்கொண்டவரென்பதாம். ஆணவமலத்தை யடக்கினவரெனினும் பொருந்தும்.

யானைவாகனம் இந்திரனால் கொடுக்கப்பட்டது. தாரகாசுரனே யானைவாகனமாயினன் என்றும் புராண சரிதமுளது. ஆட்டுக்கடா, இது நாரதமுனி வர் செய்தயாகாக்கினியினின்றும் எழுந்து, தேவர் கள் முனிவர்கள் முதலியோர்களைச் சாடிப் பெரி துந் துன்பஞ் செய்தது. அதனை அத்தேவர்கள் முதலியவர்களின் வேண்டுகோளின்படி, அதனுடைய பேராற்றலையடக்கி, எம்பிரான் ஊர்தியாகக் கொண் டருளினர். நாரதர் செய்த யாகாக்கினியினின்றும் ஆட்டுக்கடா எழுந்ததென்னை? நாரதமுனிவர் சம ணர்கள் தாருகாவனத்து முனிவர்களைப்போல யானை மாயப்பசு, நாகப்புலி முதலிய தீயபொருள்களுண் டாகும்படி பெரிய வேள்வி செய்தனரா? மேருவினுடைய பரன் விரும்ப வகிலத்தே ஓர் வேள்வியை யன்றோ நடத்தினர் எனின், இவற் றிற்கு ஏற்ற சாதனங்கள் தகரேறு படலத்திற் காணலாம். குஹசந்நிதானத்தில் மயூரமாவது, யானை யாவது ஸ்தாபிக்கலாம் என்றும், துவஜபடத்தில் மயூரமாவது, யானையாவது, கோழியாவது எழுத லாம் என்றும், குமாரதந்திரம் கூறிற்று.

எவர்களாயினும் பூதப்ரேத பிசாசாதிதுர்த் தேவதைகளும் சிங்கம், புலி, யானை, கரடி முதலிய

கொடிய விலங்குகளும் எதிர்ப்படின், வேலும் மயிலும் என் னும் மகாமந்திர முழக்கஞ் செய்வாராயின் அவை அஞ்சிப் புறங்கொடுத் தோடும். இதுபற்றியே "பயந்த தனிவழிக்குத் துணை வடிவேலுஞ் செங் கோடன் மயூரமுமே" என்றார் அருணகிரி நாதரும். வேல் வகுப்பும் மயில் வகுப்பும் அவரே அருளிச் செய்தார். கந்தபுராணத்தில் 'சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி" என் றும், "வெற்பைக் கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்கச் செவ்வே ளேறிய மஞ்ஞை வாழ்க" என்றுங் கூறப்பட்டன. ஆதிசங்கராசாரிய சுவாமியும், சுப்பிரமணிய புஜங்கத்தில் மயில்வாக னத்திற்கும், வேலாயுதத்திற்கும், ஆட்டுக்கடாவுக்கும், கோழிக்கொடிக்கும் தனித்தனிநமஸ்காரம் என்று கூறியிருக்கின்றார். "நம; கேகிநேசக்தயே சாபி துப் பியம் நமச்சா கதுப்யம் நமகுக்குடாய-நமஸ்ஸிந்தவே ஸித்து தேசாய துப்யம் புனஸ்கந்தமூர்த்தே நமஸ்தே நமோஸ்து—" இன்னும் அப்புஜங்கத்தில் சுப்பிரமணியக்கடவுளே மகாவாக்கியப் பொருள் தஹாரகாசவாசிசி பிராமணர்களுபாசித்தற்குரிய வர். கலியுகவரதர். இம்மை மறுமைப்பேறுகளைத் தருபவர், வேதப்பொருள் என்றுங்காட்டி "குஹாத் தேவமந்யம் நஜானே நஜானே" என்றும் வலியுறுத் தப்பட்டது.

சுப்பிரமணியக்கடவுள் லோகானுக்கிரகார்த்த மாகக் கொண்டருளிய மூர்த்தங்கள் பல அவற்றுட் சில கூறுகின்றோம். 1. சக்திதாஸ்வாமி, 2. கந்த ஸ்வாமி, 3. சேனாதிபதிஸ்வாமி, 4, சுப்பிரமணிய

ஸ்வாமி, 5. கசவாகனஸ்வாமி, 6. சரவணபவஸ்வாமி, 7. கார்த்திகேயஸ்வாமி, 8. குமாரஸ்வாமி, 9. சண்முகஸ்வாமி, 10. தாரகாரிஸ்வாமி, 11. ஸேநாநிஸ்வாமி, 12. ப்ர்ம்ஹசாஸ்ரஸ்வாமி, 13. வல்லீகல்யாணசுந்தரீஸ்வாமி, 14. பாலஸ்வாமி 15. க்ரௌஞ்சபேதஸ்வாமி, 16. சிகிவாகனஸ்வாமி, [இப்பதினாறு மூர்த்திகளின் த்யானங்களும், பிறவும் குமாரதந்திரத்திற் காண்க] இவை அன்றி சிவகுரு மூர்த்தம், அகஸ்தியர், நந்தி, சனகர், சனந்தர், சனாதனர், சனற்குமாரர். கபிலா, மார்க்கண்டேயர், சுகர், பராசர புத்திரர், வாமதேவர், கமலை, குசன்முதலியவர்களுக்கு ஞானம், குளிகாசித்தி, பாதுகாசித்தி, ஔஷதிசித்தி, மந்திரசித்தி முதலியவற்றை யுபதேசிக்கக் கொண்ட மூர்த்தங்கள், வள்ளிநாயகியின் பொருட்டுக்கொண்ட கிராதமூர்த்தம், உக்கிரவழுதி, உருத்திரசருமன் திருஞானசம்பந்தமூர்த்தி முதலிய மூர்த்தங்கள், இன்னும் பலவுள.

இச்சுப்பிரமணிய பரமாத்மாவை வேதாகம புராணாதிகள் நித்தியர், சர்வகாரணர், பகவர், புருஷர், சர்ருவா பாஸ்வர், சர்வநமஸ்கார யோக்யர், தத்வாதீதர், குணாதீதர், தேகாதீதர், விஸ்வாதீதர், விஸ்வேஸ்வர், விஸ்வகாரணா, விஸ்வரூபர், ஸ்வதந்திரர், நிர்மலர், தற்பரர், ஞானஸ்வரூபர், ஓங்காரஸ்வரூபர், ஈசர், ஊர்த்துவவீரியர், விரூபாக்ஷர், அபீஷ்டபிரதர், மகேசர், சச்சிதானந்தமயர், பரப்பிரமம், அஷ்டமூர்த்தி, சாவாந்தரியாமி, பசுபதி, பிரமா, விஷ்ணு ருத்திரர், பரமசிவன், சர்வதேவதாஸ்வரூபி, சர்வதேவதாஸ்வாமி என்பனவாகப் பல கூறி, அவரே

ஒப்புயர் வில்லாத முழுமுதற் கடவுளென்று அறுதி யிட்டு முழங்குகின்றன. இன்னும் பலர்புகழ்ஞாயிறி னுள்ளே பொன்மயமாங் கேசமும், பொன்மயமாந் தாடியும், பாதாதியாகப் பொன்மயமாந்திருமேனி யும், இருவிகசிதகமல நேத்திரமுடைய புருஷராவா ரெனச் சாந்தோக்கியோபநிடதத்து முதலாவது பிர பாகத்து ஆறுவது காண்டத்திலே பேசப்பட்டவர் குகமூர்த்தியே என்பது சிவரகசிய காண்டம் 31-ம் அத்தியாயத்தில் யாவர் வேதஸ்வரூபரு மிகச் சேஷ்ட ரும், சூரிய மண்டலத்திலிருக்கிறவரும், மீசை தாடி முதலாக உச்சிமுதல் கால், நகம், வரையில் பொன் மயமாகியவரும் அலர்ந்த செந்தாமரை மலர்போன்ற இரண்டு கண்களையுடையவரும், எல்லா ஜனங்களுக் கும் நாதனுமாகியவரே, அக்குக மூர்த்தியாகிய உம்மையே வேறுகதியுமற்ற யாங்கள் சரணமடை கின்றோம் என்னும் (த்ரயீமயோயஸ் ஸ்விதுர்வ ரேண்யோமண்டலஸ்திதத:) ஹிரண்யமய: 11 விகித்ர புண்டரீகாஷயுகளோசகதாம்பதி, தம்த்வாமனன்ன சரணு:- பரபன்னச்சரனம் குஹம். 29-ம் 30-ம் சுலோகங்களாலறிதல் இனிதமையும்.

இக்குகபரசிவம் "எள்ளுறு மெண்ணெய் யென்ன வெறிமணியரவமென்னக். கள்ளுறுபோது கான்றகடியெனச் சலாகைதன்னிற், றள்ளுறவரிய சோதி தானென வுலகுமெங்கு; முள்ளொடு புறமு மாகி யொருமையாற்பரவும்" ஆயினும் அவ்வுண்மை யாவர்க்கும் விளங்காது. ஆதலினாலே முத்தியடைதல் எளிதன்று. இதனை அக்குக பரசிவன் திருவுளங்கொ ண்டுதம்மை ஆன்மாக்கள் வழிபட்டுய்யும் பொருட்டுப் பூமியிலே எண்ணில்லா முக்கியஸ்தலங்களில் கோயில்

கொண்டு சாந்நித்தியமாக எழுந்தருளியிருப்பர். அவைகளுக்குள்ளே திருப்புகழ் பெற்ற ஸ்தலங்களே மிகச் சிறந்தன. அவற்றுள்ளும் பொய்யற்றகீரன் முதலிய சுப்பிரமணியபக்தர்கள் ஆறு ஸ்தலங்களைக் கிளர்ந்தெடுத்துத் திருமுருகாற்றுப்படை முதலிய பிரபந்தங்களில் துதித்திருக்கிருர்கள். அவையாவன:- திருப்பரங்குன்றம் — இது முருகக்கடவுள் தெய்வயானையம்மையைவிவாகஞ்செய்துள்ளஸ்தலம், அக்கடவுள் பராசரமுனி புத்திரர்களுக்கு உபதேசம்புரிந்த க்ஷேத்திரம். (2) திருச்சீரலைவாய்:- திருச்செந்தூர் பிரமா விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்கள், சுகர், ஐராவதம் முதலியவர்கள் பூசித்தஸ்தலம். இலை விபூதிப்பிரசாதத்தின் மகிமைகளைச் சங்கராசாரியசுவாமி "அபஸ்மார குஷ்டக்ஷயார் சப்ரமேஹ ஜ்வரோன்மதகுல்மாதிரோகா மஹாந்த! பிசாசச ஸர்வேபவத் பத்திரபூதிம் விலோக்ய க்ஷணாத்தாரகாரேத்ரவந்தேப எனக்கூறினர். (3) திருவேரகம்:- குமாரக்கடவுள்சிவபெருமானுக்குபிரணவார்த்தோபதேசம் செய்தஸ்தலம். (4) திருவாவினன்குடி — திரு லக்ஷ்மிஆ (காமதேனு) இனன் சூரியன் குடியாக விருந்து பூசித்தஸ்தலம் (5) குன்று தொடல்:— இதில் திருவேங்கடம் திருத்தணி மயூரகிரி முதலிய க்ஷேத்திரங்களும் அடங்கும். (6) பழமுதிர்சோலை:- இது இப்போ விஷ்ணு ஸ்தலமாயிற் றென்பர். இவைகளாம்.

இந்த ஸ்தலங்களேயன்றி எம்பெருமானை அன்போடு தியானித்து வழிபடற்குரிய இடங்கள் பிறவுள. அவை திருமுருகாற்றுப்படையில் "ஊரூர் கொண்ட

சீர் கெழு விழவிலும்" என்பது முதலாக "வேண்டினர் வேண்டியாங் கெய்தினர் வழிபட" என்பதிணிறுதியாக வுணர்த்தப்பட்டன. இதனைக் கந்தபுராணத்திருவிளையாட்டுப் படலத்திலுங் காணலாம்.

இக்கடவுளை மெய்யன்போடு வழிபட்ட சீரடியார்கள் அகஸ்தியமுனிவர், நாரதமுனிவர், அருணகிரிநாதர், நக்கீரர், முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலியவர்களாம். இவர்களுடைய சரித்திரங்களும் இவர்களுள் அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருவகுப்பு முதலிய ஸ்தோத்திரங்களின் மகிமைகளும், நக்கீரர் அருளிச் செய்த திருமுருகாற்றுப்படையின் மகிமையும், அதன் வரலாறும், சுப்பிரமணியோபாஸ்தி செய்வோர் இவைகளையே நித்தியமும் நியமமாகப் பாராயணஞ் செய்ய வேண்டும்.

நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் இயற்றிய சுப்பிரமணிய பராக்கிரமத்திலுள்ள சுப்பிரமணியப் பெருமான் தேவர்களிடத்து வித்வதாம்பூலம்பெற்ற சரித்திரத்தை இதில் அநுவதிக்கின்றோம்.

முந்தை காலத்தோர் நாட்கலைப் புலவர்களும் தேவர் முனிவர் முதலாயினோருங் கூடியிருந்தசபையிலே வித்வதாம்பூலங் கொடுக்க நேர்ந்தது. "யாவர் ஈண்டு முதன்மைப்புலமையுடையவர், எவர்க்குக் கொடுக்கலாம்? என்று மாராய்ச்சி தொடங்கிற்று, அது காலையாங்கிருந்தாருண் முதியவரும் ஓம்! ஓம் லம் நமஸ்தே கணபதயே! த்வமேவ ப்ரத்தியக்ஷம்

த்தவமசி" எனவரும் மதர்வணவேதப்பிரதி பாதித ரான விநாயகக் கடவுளைப் பூசித்துப் பெறற்கரும் பேறு பெற்றவளும், சங்கத்தமிழ்மூன்று மவராற் தரப்பெற்றவளும், சங்கப்புலவர்களைவென்றவளும், பரமாசாரியராகிய சுப்பிரமணியக்கடவுளுடன் கானகத்திற் கலாவினோத சம்பாடணஞ் செய்த வளும், தெயவப்புலமையளும், பாண்டியனவைக்களத் திறைட்டப்பட்டப் பொற்சங்கிலியைத் தன்னமிர்த வாக்காற்றுண்டாகச் செய்தவளும், சரசுவதியினம் சமாகத் தோற்றியவரும், அதிகமானெடுமான் வஞ்சி யினிடம் அமிழ்தமுடைத்தாங்கரு நெல்லியங்கனி பெற்றுநெடு நாளாக வசிப்பவரும் ஔவையாதலால் அவளே வித்வதாம்பூலம் வாங்குதற் குரியளென்று கொண்டு சென்று "இதனை யேற்றருள்க" என்று பணிந்து நீட்டினர்.

தெய்வப்புலமை படைத்த ஔவைப்பிராட்டி அன்னவரை நோக்கி, "அன்புடையீர்! இது பெறற் குரியவர் யாமல்லேம், புலவர்களாகிய தேவர்கட் கெல்லாம் அதிபனும், ஐந்திரவியாகரணம் என்னும் அரிய விலக்கணஞ் செய்தவனும், உலகிற்குக்காரண மாகிய மழையைப் பெய்விப்பவனுமான இந்திரன் பாற் சென்றீமின்" என்றருளினர். அன்னவரதி சயித்துச் சுவர்க்கஞ் சென்று நிகழ்ந்ததுரைத்து அவர்க்கு நீட்டினர். இந்திரனுர் உண்ணடுங்கி உரைக்கும். "ஐயகோ! இது பெறற்குயான் உரிய னல்லேன். என்னினும் சிறந்த புலவர் ஒருவருளர். அவர் இறைவனிடம் புலமை பெற்றவராய் சர்வ

ஞானக்கடலாய் உமையை மணந்தஞான்றுற்றவிடர் களைந்தவத்திற் கதித்தவராய், பிரணவோபதேசம் பெற்றுச் சங்கமும் முதநூலுர் தந்தவராய், பெரிதாய் விளங்கும் மகோததியை யுளுந்தளவாக்கி யுண்டு அண்டகோளகைகாறுமுயர்ந்து வளர்ந்து மேலுல கர்க்கெல்லாம் பேரிடுக்கண் புரிந்த விந்த மலையை யொருதிருக்கரத்தால் அடக்கிப்பாதலம் புகுத்தி வில் வலவாதாவியரை யழித்துக் காவிரி நீத்தந்தென் றிசையுறச் செய்து குற்றாலநாதரைக் குறுகுறுக வெனக் குழைத்த லிங்கவடிவமாக்கியவராய் விளங் குமவர் தம்பெருமை புகலற்கரியதே. ஆகலினவ ரிடங் கொடுபோதிரென்று ஏவினர்.

அவர்களங்ஙனே தென்றிசைக் கணுள்ள பொதிய மலை நோக்கிச் சென்று குறுமுனிவர் திருவடி களைப் பணிந்தாங்காங்கு நிகழ்ந்தன கூறவவருரைப் பர். "கல்விப்பேற்றின் பெருமைகண்டீர்! எழுத் தின் கிழத்தி நாமகளாதலாலும், திரிபுரவதஞ் செய் தருளுங் காலத்திறைவனருளுருக் கொண்டு நடித் தருளலாலும் அவ்வப்புலவர்களுக்கடோறுமமர்ந்து, அன்னவர்க்குச் சொல்வன்மை யளித்தலாலுமக ளெனப் பெயரிருத்தலாலும், அவளே கலா வல்லப முடையவள்; அவளே இதனையேற்றற் கருகமு முடையவள்: ஆகலினுங்குங்கொண்டு செல்லுதிர்" என்றேவினர்.

அவ்வாஞ்ஞையை மறுக்கலாற்றாது அன்னோர் சத்திய லோகஞ்சென்றனர், ஆங்கே வெள்ளைக் கலையுடுத்து வெண்ணிறத்த பணிபூண்டு வெண்

பூமாலை புனைந்து வெண்சந்தன மணிந்துவிளங்குஞ் சரஸ்வதி தேவியார் வீற்றிருந்தனர். இவர்கள் அவரை வணங்கி இருக்கு வேதத்திலே கூறப்பட்ட சரஸ்வதி சுலோகி என்னுமரியமந்திரமாகிய நீகார காரக நசாரசுதாகாராபாம் கல்யாணிதாம், கனக சம்பக, தாமபூசாம் உத்துங்கபீ நகுசகும்பக மனோ கராம்கிம்–வாணீம்நமாமி யநாசவசாசாம் விபூத்யை ஒம்பிரஜ்ஞேதேவீசரஸ்வதீ வாஜே பீர்வாஜநீவதி!

என்னுமிதனைக் கூறித் துதித்தனர். கலைமகள் கேட்டு, யாதுகாரணங்கழறுதி ரென்னலோடுமிவர் உரைப்பர் இசைமடந்தாய்! வித்வ தாம்பூலங் கொடுக்கவேண்டிக் குறுமுனிவர்பாற் போந்தகாலை, அன்னவர் சகலகலா வல்லியாகிய நின்னிடம் போமாறு ஆஞ்ஞாபித்தனர். ஆகலினிதனையேற் றருள்க" வென்று வேண்டினராக. ஞானமூர்த்தி யாஞ் சரஸ்வதியவர்களை நோக்கியுரைக்கும், "அம் மவோ! யான் தாம்பூலம்வாங்கற்கு உரியளல்லள். நான் கற்றதுங் கல்லாததுமான அளவுகளையறையுங் கால் கற்றதோ கைக்குள் அடங்கிய மண்ணளவா கும். கல்லாதனவோ உலகளவு இருக்கின்றன. ஆதலாற் பூரணகலாவதியாயிருப்பவர் திரிபுராபர மேச்சுவரியென்பது தேற்றம். அவர்தம்மையே அதர்வணவேதமும்,

"ஸர்வமந்திரா நைகதாம் பூடோபபீடதேவதா பரிவ்ருதாம் ஸகலகலா வியாபிநீம்,தேவதாம் ஸாமோ தாம் ஸபராஹூாம் ஸஹூற்ருதயாம் ஸாம்ருதாம் ஸகளாம் ஸேங்த்ரியாம் ஸதோதிகாம் பராம் வித்தி

யாம், ஸ்பஷ்டீக்ருத்வா ஹ்ருதயே ஙியாயவிஞ்ஞா  
ஙிவியம் கமயித்வாதிரிபுராம் பரமாம் மாயா ச்சேஷ்  
டாம்".

என் றற்றொடக்கத்தவா வுரைக்கின்றது சிவா  
கமங்களும், அவ்வம்மையார். தம்மையேவாகீசுவரி  
யெனக்கழறுகின்றது. ஆகலானவரிடஞ் சென்று  
கொடுக்கவென்றேவினள். அவ்வாறே அன்னோர்.  
திருக்கயிலை மலைசென்று திருநந்தியங் கடவுளின்  
விடைபெற்று அம்மையார்தம் நாயகரானபரமபதியு  
டன் திருவோலக்கங் கொண்டெழுந்தருளியிருக்கும்  
கோயில் சென்று வணங்கித் துதிப்பாராயினர்.

ஸர்ஙிதாய ஹ்ருதய கமலகர்ணிகாயாம் பராம்  
பகவதீம் லக்ஷ்மீம் மராம் ஸதோதாம் மஹாவச்யக  
ரீம் மதரோங்மாத நகாரிணீம் வாக்விச்ரும்பிணீம்  
சந்திரமண்டல மத்யல வர்தநீகிம் சந்ரகாரம் சப்த  
சிம மகா ஙித்தியோப ஸதிதாம் ஸ்ரீபீடேபராம்பைர  
வீம் சித்காளாம் மகாதிரபுராதேவீம்த்யாயே.

எனவரூஉம் வேதமந்திரங்களை யெடுத்து வழுத்தி  
யகாலை யம்பிகை யாரென்னென்று வினவியருளி  
னர். அவர் நிகழ்ந்தன கூறினர். அவற்றைக்  
கேட்டருளிய மகாதேவி திருவாய் மலர்ந்தருளும்.  
"அம்பீ! தலைச்சங்கத்திலிருந்து தமிழாராய்ந்தமை  
யாலும், தமிழை வளர்த்தபுலவன் அகத்தியனுக்குச்  
செந்தமிழைச் செவியறிவுறுத்தமையாலும், கடைச்  
சங்கத்திலே களவியலின் மெய்யுரையைக் காட்டிய  
மையாலும், பரமகுருவாந்தன் தந்தையார்க்குப்பிரண

வாருத்த மொழிந்து, சிவகுருவாய் விளங்கலானும் நக்கீரன் முதலிய அடியவரையும் தமிழ்மாலை கேட்டு அவர்க்கருள் புரிதலானும், பராசரகுமாரர்கள் நந்தி முதலாயினோருக்கு ஞானோபதேசம் புரிதலானும், செந்தமிழ் மொழிக்குச் சிறப்பாயுள்ள அகப்பொருளிற் களவியல் கற்பியலென்னு மிரண்டனுட் களவிய லொழுக்கை மரவரல் வள்ளியானும், கற்பியலென்னும் ஒழுக்கத்தைத் தேவகுஞ்சரியானும், நிறுத்து உணர்த்தினமையானும், சர்வகலாஞான சத்திதான் ஞானசக்தி ஆன்மாவென விளங்கலானும், அருணகிரியின் புகழ் கொண்டருளியதனுனும், வேதப் புலவனென விளங்கிய விரிஞ்சனைச் சிறையிட்டமையானும், இன்னும் பல வேதுக்களானும், நங்குமரன் சுப்பிரமனியனே சகலகலா வல்லவனாவான். அவனிடஞ்சென்மி" னென் றேவியருளினர்.

அவ்வாறே அவர்களிறுதியிற் கந்தலோகஞ் சார்ந்து பரமகருணை நிதியாகிய சுப்பிரமணியக் கடவுளைத் துதித்து,

(ஸர்வதேவாத் மகஸ்கந்த ஸர்வ லோகாத்மகந் ததா ஸர்வபூதாத்மகச் சர்யம் ஸாக்ஷாத்ப்ர்ம்ஹ ஸநாதநம்) எனவும்,

(த்ரயீமயோயஸ் ஸவிதுர்வரேண்யோ மண்டல லேஸ்தித: ஹிரண்யச் மச்சுரூரர் கேசமாநகாக்ரம் ஹிரண்மய- விசித்ரபுண்டரீகாக்ஷயுக ளோஜகதாம் பதி: தம்த்வா மனன்ன்யசரணு ப்ரபன்னுச் சரணம் குஹம்.)

இவ்வாறாகத் தேவர்களும் முனிவர்களும் துதி செய்து பன்முறை வணங்கி நின்றனர். அநாதிமல முத்த விபுத்துவப் பொருளாய், உரு குணம் குறி செயல் பெயர் முதலியன இல்லாராய் ஒப்புயர் வின்றி ஆன்மாக்களின் இருதய புண்டரீக வீடாகும் தகராலயக்கண் சிதாகாயப் பொருளாயிருக்கும். சுப்பிரமணியப் பெருமான், நீவிர் வந்த காரணமி யாது என்று வினவியருளினர். அவர்கள் தாம் வந்த காரணத்தை விண்ணப்பித்து நின்றபொழுது சகலகலா வல்லபமூர்த்தியாகிய குமாரக் கடவுள் புன்னகைபுரிந்து ஏற்றுக் கொண்டேம் என்று திரு வாய் மலர்ந்தருள வீரவாகுதேவர் வந்து அத்தாம் பூலத்தை எடுத்தனர். அதனால் அவர்களும் குமாரக் கடவுளின் மகிமைகளைப் பாராட்டி பஞ்சதருக்களி லுள்ள புஷ்பங்களை மழைபோலச் சொரிந்து ஆனந் தக் கூத்தாடினர், இதனால் குகக்கடவுளார் சகல கலாவல்லப மூர்த்தியாயினர்.

" இவ்வாறச் சபையினர் தாங்கேட்டுநனி
விம்மிதமுற் றியம்பொணாத
துவ்வாறு மொழி வடிவிற் கந்தபுரஞ்
சென்றிறையைத் துதித்து நிற்ப
வவ்வாறங்குணர்ந்தருளிப் புன்னகைபூத்
திவ்வரிசை யழகிற் கொண்டேந்
தவ்வாத குணத்திரெனும் சகலகலா
வல்லபனுஞ் சாமிதானே."

இதுகாறுங் கூறியவற்றால் அருவமுருவுமாகி யநாதி யாய் பலவா யொன்றாய் பிரமமாய் நின்ற சோதிப்

பிழம்பாகிய சுப்பிரமணியக் கடவுளே முழுமுதற் கடவுளென்பது, நம்சிற்றறிவிற்கெட்டியபடி காட்டினும். அம்முழுமுதற் பெருமானைப் பேரன்போடு மனவாக்குக் காயங்களினல் வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டே அக்கடவுள் இவ்வரியமானுடப் பிறவியை நமக்குத் தந்தருளினர். பெறுதற்கரிய பிறவியைப் பெற்று நின்சிற்றடியைக் குறுகிப் பணிந்து பெறக்கற்றிலேன் என்றார் அருணகிரி நாதரும், அவரே பெத்தநிலை, முத்திநிலை இரண்டினும் நம்மோடு தொடர்புடையராய், நமக்கு நம்மினு மினியவராயுள்ளவர்; அவருக்கே நாமெல்லாமுடமைப் பொருள், அவருக்கே நாமெல்லாமன்பு செய்தல் வேண்டும். அவ்வாறு மெய்யன்பு செய்வோமாயின் வேண்டுவார் வேண்டுவதே ஈயும் பரமகிருபாளுவாகிய சுப்பிரமணியக் கடவுள் இம்மையிலே கல்வி, செல்வம், சற்புத்திரப்பேறு, தீர்க்காயுசு, சத்துருஜயம், இராஜவசியம் முதலிய அபீஷ்டங்களைத்தந்து மறுமையிலே நிரதிசயானந்தத்தில் என்றும் சந்தோஷத்தோடு இருக்கும்படி பெருங்கருணை செய்தருள்வார்.

களத்ரம்ஸ—ஹாபந்து வர்க்கபசுர் வாணரோத நாரீக்ரஹேயே மதீயாயஜ்ந்தேதோ நமந்த ஸ்வந்தோ பவந்தம் ஸ்மரந்தச்சதே ஸந்து ஸர்வேகுமார.

என்றும்

"துய்யதோர் மறைகளாலுந்
துதித்திடற்கரிய செவ்வேள்
செய்ய பேரடிகள் வாழ்கச்
சேவலும் மயிலும் வாழ்க

வெய்யசூர் மார்பு கீண்ட
வேற்படை வாழ்க வன்னுன்
பொய்யில் சீரடியார் வாழ்க
வாழ்கவிப் புவனமெல்லாம்.''

இதுவன்றியும் நக்கீரர் அருளிச்செய்த மந்திர முருகாற்று, எதிர்முருகாற்று என்னும் இரண்டையும் பலருக்கும் உபயோகமாகும் பொருட்டு பிரசுரிக்கிறேன்.

---

உ

சிவமயம்

# மந்திரமுருகாற்று

---

ஓ அம் ஆம் இறீம் கிலீம் ரூரேம் ஐம்கிலீம் சௌம் சரவணபவ-சத்திபுத்திராய திரிபுரபவகுக் குடத்துவசாய - திகளொளிபவது வாதசாட்சராய- சயிலொளிபவ-சர்வ -சத்துரு-அராய - ஓம் - நமோ- குமாராய-நமசிவாய-சர்வ-பூதராய -கார்த்திகேசாய- கந்தாகடம்பா-கயிலாயவாசா-வா - வா - கருணாகரா வா வா-சீக்கிரம்-சீக்கிரம்-சிறீம்-இறீம்-சௌம்-அரி ஓம் சுப்பிரமண்ணியாய ஓம் சரஅணபவ=ஓம் திக ளொளிபவ-ஓம் சமநொளிபவ-பரிபுரபவ-பவணொளி பவ-சயிலொளிபவ-சரஅணபவ - சண்முகாய - ஆம் நமசிவாய-கார்த்திகேசா மயூரவாகனா-தெய்வயானை நாயகா=வள்ளிமணவாளா -ஆறுமுகவா - பன்னிரு கரவா - ஆடையாபரண மாலிகாயா=அருமணிவயிர அபிசேகாயா-பன்னிருகுழையும்-பணிபலவாகிக் - கிரீ டஞ் சூழ்ந்த கிளர்வர்ண மெய்திய பிறையும்-சிந்தூர நுதலுங்-நவமணிவயிரவச் சிராங்கியும் பன்னிருகர மும்-பலவாயுதங்கள்-சங்கு சக்கரம் - பன்னிருபுயமு மா-வச்சிராயுதமும்-வயிரவாளும்-சூலமும்-வேலும் தோட்டியும்-மழுவும்-சுரிகை-பரிசை-துளைவில்லம்பு -கடைத்தலைப்படையுங் காட்டாரி சொட்டையும் பிடித்த கரத்திடைப்-பெருவிரற்-சுற்றியே-எடுத்த வாயுதங்கள் எண்ணிலக்கில்லாச்-சூரன் மார்பைத்- துளைத்திடுவேலும்-பலவிதவண்ணமாய்ப் - படைத்த

திருமேனியுங்-கச்சுடை மருங்கிற் கட்டிய ஒட்டியாணமும்-சிற்றிடை இலங்கச் சேர்த்திடும்பணி, பல வண்ணக்கலையும், வகுத்த தொங்கலும் வீரத்தண்டையுப் வெற்றிச் சிலம்புஞ் சதங்கை-கிண்கிணி-சலசல சலெண இடும்பணிதம்மை ஏற்றிய சீர்பாதமுஞ் தேவாமுனிவர் சிந்தைகளிப்ப-வாதியுமையாள் ஒன்றாய் அணைத்த முருகா-அன்னை பிதாவுக்கறிவு அறிவித்தாய். முப்பத்து முக்கோடி தேவர் இருவதிகள் புடைசூழக் காலி-கூளிகணங்கள் களித்திடவாளி எழுமதிர்முரசாற் பலவாத்தியங்கள் பலவிதம் முளங்க வீரஸ்திரீகள் வெற்றி கூறத்-தேவஸ்திரீகள் தீபமெடுக்க ஆடல்பாடல் அரம்பையர்-சூழ்ந்திடப்புட்பமாரி பொன்னுயுதிரச் உதிரச்-சந்தனக்குங்குமம் தடமணி மார்புற வருக முருக தெய்வயானை வள்ளி சேர்ந்திருபுறம் வரத்-தந்தி முகவா தந்தைதாய் பின்வர கொற்றக்குடையும்-கோழிக்கொடியும் எத்திசையெங்கும்-இலங்கித்துலங்கிட காகரிஷிழற்ற கங்குல் துலங்கிட சேறு அரவினைக்கொத்தியே யெடுத்துச் செம்பதுமத்தாள்-சேர்ந்திட முற்றும் வரு மயில்வாகன மால்மருகா-வேல்முருகா-நாதர்சோலை வள்ளிமணவாளா-வா-வா-வந்தென் முன்னில் இட்ட காமியங்கள் எமதுறவருளி-ஓம் அகார ஓம் அகார ஓம் ஆம் ஈம் சிவ சிறீம் சிவாயநம சரவண சண்முகாயநம ஆவினன்குடியாய் நம பரங்குன்றைவாய் நம-பழமுதிர்சோலை-மலைக்குள்ளோனே நம ஓம்கார இறீம்கார உருவமானாய் நம-உமைதரு புதல்வா-அரிமருகா-ஒளிபலவானாய் நம சூர்பயம்-வராது காத்திட்ட நிக்கிரக-சிட்ட பரிபாலா திரிலோக்கிய வசீகராயா நம செந்திலிற் காந்தாநம சிறீம் கிலீம்

சௌம் சந்தான சத்திவேதச் சதாசிவ சரவண பவ சண்முகா அரி ஓம் ஆம் ஈசிய சிறீம் சிவாய நம சரவணபவ ருத்திர புத்திரா வருக முருகா குமரா வா வந்தென் முன்னில் என்சொற்கொள். நானுன் வடிவுகொண்டேன் என்னுலர உன்னுரை எனக்கே சித்தி மந்திர சித்தி தந்திர சித்தி சர்வ லோகங்களும் அலங்காரமும் சர்வஸ்திரீகளும், தன தானியமும் வஸ்த்திர அலங்காரமும் எனக்கே சித்தி தா, தா-எனக்கே-முத்தி தா தா வா வா பார் பார் தாக்கு தாக்கு சர்வசம்பத்தும் தா பெல்லி வஞ்சனை சூனியங்கள் சர்வ பூதப் பிரேதபசாசுகள் ஏய்வன எரிவன தம்பய தம்பயகாதய காதயமோதய மோதய தாக்கு தாக்கு வீசு-வீசு-போடு-போடு கட்டு கட்டு. இறுக்கு இறுக்கு அப்பு அப்பு மூட்டு-முட்டு-பேசு பேசு-ஆவேசு-ஆவேசு. அம்மை உமையாளை ஆதி பரத்தாளை ஆனை முகவன் றனை அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஐம்பத்தோர் அட்சரமும் சபையில் இட்டேன். நான்தான் வெற்றிவேல் கைக்கொண்டு வீரவாள் வீசிக்கொண்டு உற்று நான் அருகே. வந்து நிற்க. சற்று நீ கெணியாதே சரசொடு வேல் கொண்டு என்னைப்பற்றி, வெருட்டு முன்னே பாதமே பணிவேன் கண்டாய் சர்வ சத்துரு நசி நசி சர்வ விஷமும் நசி நசி, சரவணபவ சற்குரு தேவா அட்ட பலமும் தந்தே யாழ்வாய் வேல் முருகா மால்மருகா வீரதண்டைக் காலா வாழ் முருகா நாதர்சேரலை. வள்ளி மணவாளா, வருக முருக. வருக சரவணகாரணர்த்தே.

ஓம் சௌம் சரவணபவாய சிவசிவ சத்தி புத்திராய குக்குடத்துவசாய கார்த்திகேசாய குமாராய துவாதசாட்சராய சர்வ சத்திதராய சர்வசத்துரு அராய ஓம் குமாராய நம சுவாகா.

சிவகுரவேகமகா

௨

சிவமயம்

# எதிர்முருகாற்றுப்படை

ஓம் சிவ சிவ சிவ சண்முகா சிறீ சண்முகா கார்த்திகேயா சிறீ கூர்வேல் திரிபுர சண்முகா. திகழொழி சண்முகா பரிபுர சண்முகா. பவனொழி சண்முகா சயிலொழி சண்முகா சமனொழி சண்முகா சங்கார சண்முகா, ஒருகை சிலை ஒருகை கண்ட கோடாலி ஒருகை சங்கு ஒருகை சக்கரம் ஒருகை சூலம் ஒருகை கொட்டை ஒருகை சூரகை ஒருகை சுக்குமாறு ஒருகை வேல் ஒருகை கேடகம் செச்சைத் தொங்கலும் சீரார்வரையும் பச்சை வகையும் பணைத்த தோளும் கொச்சை மகள் பாகமுங் குளிர்ந்த முகத்தழகுங் கோடி சூர்யப்பிரகாசமும் மிச்சையுடனே எனக்கெதிர்வந்து அச்சங்கெடுத்து அடியார் துதிக்கும் பச்சைமயிலும் பரிம்புறஞாணும் கச்சையுடையுங் கமலப்பதமும் -ஏறு ஏறு சண்முகா எரி எரி சண்முகா மாறு மாறு சண்முகா வரி வரி சண்முகா கணப்படைகொண்டு கணத்தில் நீறுக்கு நான் நினைத்த சத்துருவும் என்னை எதிர்த்தபேயும் உன்னை எதிர்த்த சூரன் உடல் துணிந்தாப் போலத் துணி என்னை எதிர்த்தபேயும் பசாசும் பெல்லி சூனியமும் எரி எரி சண்முகா வலத்திரி திரிவேலா கட்டு கட்டு குத்து குத்து வெட்டு வெட்டு முட்டு முட்டு சூலை சூலைந்து நடு நடுங்கி நாசமாகவே சுவாகா.

ஓம் நம நமசிவாய ஓம் ஓம் சௌம் கிலீம் ஓம் திரிபுர ஓம் ஆம் நமசி நமக.

மந்திரமுருகாற்றும், எ...முருகாற்றும் ஆகிய இவ் விரண்டையும் சுப்பிரமணிய சுவாமியை வழிபடும் மெய் யன்பர்கள் நித்தியமும் நியமமாகக் காலை மாலை நேரங் களில் பாராயணம் செய்துவரின் கிரகதோஷம் பைசாச பீடை பகைவர்களது ஏவல் முதலிய துர்ச் செயல்களா லும் சகலவியாதிகளாலும் நீங்கப்பெற்று ...கப்பெரு மானது திருவருளால்-சற்புத்திரப் பேறும்-சகலபாக்கி யங்களும் எய்தப்பெற்று, இன்புற்று வாழ்வார்கள் என்பது நிச்சயம்.

பாலைப்பதியுடையாய் பன்னிரண்டு கையுடையாய்,
மாலைக் கழகுபெறும் மார்புடையாய்-காலையினுஞ்
செய்யாய் மலைகுழியச் செவ்வே லெடுத்தெறியுங்
கையாய் கடையோக்கார்.

முற்றும்

வ்
ய்
ங்
ச
ா
ரு
கி
ள்

ப்,

ம்